மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2026– ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
இடைக்கால மனுஎண்.21/2026 ல் அசல் வழக்கு எண்.123/2022
**CNR.No. TNTT–08000190–2022**

பார்வதி அம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1.M.மகாராஜன்
2.M.சுந்தர்
3.முருகன்
4.சாந்தி
5.தங்கராஜ் ... எதிமனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.திருமலைக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ச.ஆறுமுகப்பெருமாள் அவர்கள் முன்னிலையாகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு துர்கேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினராகியுள்ள நிலையிலும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (21.04.2026)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

அசல் வழக்குரையை சீர்திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.21 11:50:49 +0530

**2. மனு சுருக்கம்:**

அ) தாவா சொத்தினைப் பொறுத்து வாதி விளம்புகை பரிகாரமும் தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்தினை எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கடந்த 27.02.2026 ம் தேதி வழக்குரையை சீர்திருத்தம் செய்ய வேண்டி தாக்கல் செய்த இடைநிலை மனு எண்.20/2026 ஆனது விசாரணையில் இருந்து வந்த நிலையில் மேற்படி மனுவில் நீதிமன்ற கட்டணம் தொடர்பாக சீர்திருத்தம் செய்ய கோராமல் கவனக் குறைவாக தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் திரும்ப பெற்று விட்டு தற்போது இம்மனு நீதிமன்ற கட்டணம் தொடர்பான சீர்திருத்தம் செய்ய வேண்டியதை உட்படுத்தி மீண்டும் இடைக்கால மனுவாக தாக்கல் செய்யப்படுகிறது.

ஆ) தபசில் சொத்தானது மனுதாரருக்கு கடந்த 14.03.2001 ம் ஆண்டு கிரைய ஆவண எண்.322/2001 ன்படி பாத்தியப்பட்டதாகும், மேற்படி கிரைய ஆவணத்தில் கீழ் நான்கு வகையான உட்பிரிவு கொண்ட சொத்துக்களை கிரையம் பெற்றிருந்த நிலையில் அதில் 2 வதாகக் குறிப்பிடப்பட்டிருந்த தபசிலைப் பொறுத்து மட்டும் பரிகாரம் வேண்டியிருந்த நிலையில் விசாரணையின் போது ஆவண எண்.322/2001 ன் ஆவணத்தில் அனைத்து தபசில்களையும் வழக்கில் இணைக்க வேண்டும் என்ற விவரத்தினை வாதி அறிந்து கொண்டார். மேலும் வழக்குரையில் ஆ மற்றும் இ பரிகாரங்கள் தேவையற்ற பரிகாரங்கள் ஆகும்.

இ) வழக்கிற்கு பின்னிட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் விசாரணை நடைபெற்ற காலத்தில் கட்டுமானப் பணி செய்துள்ளதை அகற்றுவதற்கு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோர வேண்டியுள்ளது. எனவே அசல் வழக்கில் தபசில் சொத்திலும், பரிகாரத்திலும் மனுவில் கூறியபடி சீர்திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், 1, 2 ம் எதிர்மனுதாரர்களுக்கும் இடையேயான தாவாவை முழுமையாகத் தீர்வு காண சீர்திருத்தங்கள் தேவையாகவும், அவசியமாகவும் உள்ளது. இம்மனு அனுமதிக்கப்படுவதால், எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித கஷ்ட



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:50:52 +0530

நஷ்டமும் ஏற்படப் போவது இல்லை. மனு அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படும்.

**3 எதிருரை சுருக்கம்:**

அ) மனு சங்கதிகள் குறிப்பிடப்பட்டு உண்மையல்ல என்று சொல்லப்பட்டுள்ளன. புதிதாக சீர்திருத்தம் செய்து சேர்க்க வேண்டிய தபசில் சொத்துக்களை பொறுத்து எந்தவிதமான வழக்கு மூலமும் ஏற்படாதபோது அவைகளை சேர்க்க வேண்டிய அவசியமில்லை. தாவா வழக்கானது 2ம் தபசில் சொத்தில் வாதி கட்டுமானப் பொருட்கள் இறக்க முற்பட்டபோது 2022 மார்ச் மாதம் 1, 2 பிரதிவாதிகள் இடையூறு செய்ததாகும். தபசில் சொத்தினை பொறுத்து 5ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண்.265/2009 மற்றும் 3, 4 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகளின் தந்தை முருகனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண். 4842/2012 ஆகியவைகள் செல்லாது என்று தான் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர். ஆனால் தாவா மனுவில் புதிய வழக்கு மூலமும், புதிய சொத்துக்களும் சேர்க்கப்பட்டுள்ளதால் வழக்கின் தன்மையும், பொருண்மையும் மாறுபட்டுள்ளதால் புதிய வழக்கினை தான் தாக்கல் செய்ய வேண்டுமே தவிர தாவா வழக்கினை சீர்திருத்தம் செய்ய இயலாது.

ஆ) தபசில் சொத்தான கிழமேல் 28 அடி தென்வடல் 13 அடி மொத்தம் 364 சதுர அடியில் பிரிவின்றி பொறுத்து 182 அடியை பொறுத்துதான் விளம்புகை பரிகாரமும் உறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்கப்பட்டுள்ளது. தற்போது புதிதாக சேர்க்க கூறியுள்ள 4ம் தபசில் நிலத்தை பொறுத்து பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக செயலுறுத்துக்கட்டளை கேட்டுள்ளதை பொறுத்தும் புதிதாக வழக்குமூலம் கூறியுள்ளதால் புதிய வழக்குதான் தாக்கல் செய்ய வேண்டுமே தவிர, தாவா வழக்கினை சட்டப்படி சீர்திருத்தம் செய்ய இயலாது. புதிய பரிகாரத்தை பொறுத்து வழக்குரையில் எந்த வழக்குமூலம் ஏற்படாதபோது சட்டப்படி சீர்திருத்தம் செய்ய முடியாது. தீர்ப்புரை சொல்லக்கூடிய நேரத்தில் தாவா வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்று மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:50:55 +0530

**4.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை**

வழக்குரையை சீர்திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**தீர்வு**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் ஆவர். இம்மனுவில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினர் ஆகியுள்ளனர். அசல் வழக்கானது மனுதாரரால் வல்லநாடு கஸ்பா கிராமம், கற்பக விநாயகர் கோவில் தெருவில் நத்தம் சர்வே எண்.329/1, 334 ஆகியவற்றின் தற்போதைய நத்தம் சர்வே எண்.751/31 மற்றும் 751/35ல் கிழமேல் 28 அடி தென்வடல் 13 அடி ஆக 364 ச.அடியில் பிரிவின்றி 182 ச.அ விஸ்தீரணம் கொண்ட தபசில் சொத்து மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்வதன் தொடர்ச்சியாக அதில் மனுதாரரின் அனுபவத்தினை எதிர்மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மற்றும் தபசில் சொத்தினைப் பொறுத்து 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி 3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திய கிரைய ஆவண எண்.265/2009 மற்றும் 3, 4 பிரதிவாதிகள் மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளின் தந்தையுடன் ஏற்படுத்திய கிரைய ஆவண எண்.4842/2012 ஆகியவைகள் இல்லாநிலையது என்று விளம்புகை பரிகாரம் ஆகியவை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. அசல் வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் 11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பு சாட்சியங்கள் முடிவுற்று வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வாத உரை



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:50:58 +0530

கேட்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் போதிய கால அவகாசம் அளித்தும் வாத உரை நிகழ்த்த முன்வராத நிலையில் 20.02.2026 ம் தேதிக்கு முன்பு வாத உரை நிகழ்த்த உரிமையளித்து 23.02.2026 ம் தேதி தீர்ப்புக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கினை மறு திறவு செய்யக் கோரியும், ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியரை தபசில் சொத்துக்கான புலப்படம் மற்றும் அடங்கல் ஆவணத்துடன் முன்னிலையாகி சாட்சியமளிக்க வேண்டியும் இடை நிலை மனு எண்கள்.18/26 மற்றும் 19/26 ஆகியவை கடந்த 17.02.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டன.

7. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் வழக்குரையினை திருத்தம் செய்யக் கோரி 27.02.2026 ம் தேதி இடைநிலை மனு எண்.20/26 தாக்கல் செய்யப்பட்டு புதிதாக மனு தாக்கல் செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் திரும்பப் பெறப்பட்டதன் அடிப்படையில் 27.03.2026 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. இதனையடுத்து இம்மனுவானது அசல் வழக்குரையை திருத்தம் செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது கடந்த 07.03.2022 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

8. தாவா வழக்கு தாக்கல் செய்த ஆரம்பத்தில் வல்லநாடு கஸ்பா கிராமம், கற்பக விநாயகர் கோவில் தெருவில் நத்தம் சர்வே எண்.329/1, 334 ஆகியவற்றின் தற்போதைய நத்தம் சர்வே எண்.751/31 மற்றும் 751/35 ல் கிழமேல் 28 அடி தென்வடல் 13 அடி ஆக 364 ச.அடியில் பிரிவின்றி 182 ச.அ விஸ்தீரணம் கொண்ட சொத்து மட்டும் தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் இம்மனுவின் மூலம் மேற்படி சொத்தினை 2 ம் தபசில் சொத்தாகவும், 14.03.2001 ம் ஆண்டு கிரைய ஆவண எண்.322/2021 ல் கண்டுள்ள 1, 3, 4 இலக்க சொத்துக்களை வழக்குரையில் 1, 3, 4 இலக்க சொத்துக்களாகவும் சேர்த்து திருத்தம் செய்யக் கோரியுள்ளார்.

9. மேற்படி கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புதிதாக சேர்க்கப்பட வேண்டிய 4 ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் கிழமேல் 7 அடி தென்வடல் 9 அடி ஆக 63 சதுரடி



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:51:01 +0530

ஆக்கிரமித்துள்ளதாக கூறி அதனைப் பொறுத்து செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி வழக்குரையினை திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. வழக்கு 07.07.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இம்மனுவானது அதிலிருந்து 3 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோருவதற்கான காலவரம்பு 3 ஆண்டுகள் ஆகும். 1, 2 எதிர்மனுதாரர்கள் எந்த தேதியில் 4ம் தபசில் சொத்தினை ஆக்கிரமித்தார்கள் என்று இம்மனுவில் சங்கதி எதுவும் இல்லை.

10. வழக்குரையில் 1, 2 பிரதிவாதிகள் 03.03.2022ம் தேதி தபசில் சொத்து அத்துமீறி நுழைய முயற்சித்ததாக வழக்குமூலம் சொல்லப்பட்டு, தபசில் சொத்தினை சட்ட முரணான வழயில் கையகப்படுத்த முயற்சித்து வருவதாக சங்கதிகள் முன்னிடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 28.11.2022ம் தேதியும், 3, 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 07.11.2022ம் தேதியும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் 28.11.2022ம்தேதியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 02.01.2024ம் தேதி கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதில் சர்வே எண்.701/31க்கும், 751/35க்கும் இடையே சர்வே எண்.751/32 உள்ளதாகவும், 751/35ல் அருள்மிகு பாதாள கரண்டி அம்மன் கோவிலும், காலிமனையும் வைத்து 1, 2 எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது.

11. தாவா வழக்கில் 22.06.2024ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு மனுதாரரான வாதி 29.07.2024ம் தேதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்களும். மாரி என்பவர் 20.06.2025ம் தேதி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.10ம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1ன் 29.07.2024ம் தேதிய சாட்சியத்தில் தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக எதுவும் சொல்லவில்லை. 1, 2 எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த 28.11.2022ம் தேதியிலேயே தபசில் சொத்தில் பாதாள கரண்டி அம்மன் கோவில் உள்ளதாக சங்கதி முன்னிட்டுள்ள நிலையில் அதிலிருந்து 3 ஆண்டுகள் கழித்து வழக்கினை செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி திருத்தம் செய்யக் கோருவது காலம் கடந்த பரிகாரத்திற்கு



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:51:04 +0530

வழக்கிடுவதற்கு அனுமதிப்பதற்கு ஒப்பாகும். எந்த தேதியில் தபசில் சொத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்று எந்த சங்கதியும் மனுவில் இல்லை.

12. ஆவணங்களைப் பொறுத்து விளம்புகைப் பரிகாரம் வழங்குவதா? அல்லது இல்லையா? என்பதை தீர்ப்பில் பரிசீலனை செய்து கொள்ளலாம். எனவே ஆவணங்களை இல்லா நிலையது மற்றும் செல்லா நிலையது என்ற பரிகாரங்களை நீக்கம் செய்வதற்காக வழக்குரையினை திருத்த வேண்டிய அவசியம் தற்போதைய சூழ்நிலையில் உள்ளது. வழக்குரையினை திருத்தம் செய்வதற்கு மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் போதுமானதாகவும், திருப்தியளிப்பதாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டியுள்ள **கிருஷ்ணமூர்த்தி விஜயகுமார் எதிர் கே.எஸ்.ஸ்ரீனிவாசன் மற்றும் ஒருவர் 2015(1)LW824, எம்.மோகன் எதிர் ஜி.ஜனார்த்தனன் 2025(4)LW597 மற்றும் சுப்பம்மாள் மற்றும் பலர் எதிர் ஈஸ்வரமூர்த்தி கவுண்டர் மற்றும் பலர் 2025(4)LW436** எனும் முன் தீர்ப்புகள் இம்மனுவின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**13. முடிவாக,**

**இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 21.04.2026 உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:51:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை

மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் –இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் -இல்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.21 11:51:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.